


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.1.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார், 2024–ஆம் ஆண்டிற்கான அண்ணல் அம்பேத்கர் விருது அறிவிக்கப்பட்டமைக்காக சந்தித்து நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றார். உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம். பாபு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரிய, பணி நியமன ஆணைகள் பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நேற்று (6.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி எஸ். மதுமதி ஆகியோர் உடன் உள்ளனர்.

# அடாவடி ஆளுநருக்கு அனைத்துத் தரப்பிலும் கண்டனம்!

**சென்னை, ஜன. 7-**

**அடாவடி ஆளுநருக்கு அனைத்துத் தரப்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

### ம.தி.மு.க.



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இதுகுறித்து இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் உரையாற்ற வேண்டிய ஆளுநர் தேசிய கீதத்தை பாடவில்லை என்று கூறி வெளியேறி இருப்பது ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று என்பது தெளிவாகத் தெரிகிறது. சட்டமன்றத்தில் பின்பற்றப் பட்டு வரும் மரபு அடிப்படையில் ஆளுநர் உரை தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவாக தேசிய கீதமும் இசைக்கப்படும். கடந்தாண்டே சட்டப்பேரவை தலைவர், பேரவை மரபு குறித்து ஆளுநருக்கு தெரிவித்திருக்கிறார். ஆனால் ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள உரையை வாசிக்காமலேயே வெளியேறிவிட வேண்டும் என்று முன்கூட்டியே முடிவு செய்து கொண்டு அதையே நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தை அவமதித்துள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி செயல் கடும் கண்டனத்துக் குரியது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து இதுபோன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதும், அரசியல் கட்சிப் பிரதிநிதி போல அரசுக்கு எதிராக அவதூறுகளை ஆளுநர் அள்ளி வீசி வருவதும் அவர் வகித்து வரும் அரசியல் சாசன பொறுப்புக்கு ஏற்றது அல்ல. சட்டமன்ற அவைத் தலைவர் வாசித்துள்ள ஆளுநர் உரையில், திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள், அதனால் மக்கள் பெற்று வரும் பயன்கள் குறித்து பட்டியலிடப்பட்டு இருக்கின்றன. பொருளாதார குறியீடுகளில் தமிழ்நாடு எட்டியுள்ள வளர்ச்சி என்பது அதன் மனித வள மேம்பாட்டு குறியீடுகளிலும் பிரதிபலிக்கிறது. இவ்வாறு பொருளாதார வளர்ச்சி அடைவதும் மருத்துவம் கல்வி மற்றும் சமூக நலனும் மேம்படுத்துவதில் நாட்டிற்கு முன்னாடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் பொருளாதாரம் மேம்பாட்டிற்கு வழி வகை செய்துள்ளது. கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் 1.15 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை இந்த அரசு உரிமைத் தொகையாக வழங்கி வருகிறது. இவ்வாறு பயன்பெறும் குடும்பங்களின் வறுமையை இந்தத் திட்டம் குறைத்துள்ளது மட்டுமின்றி, பெண்களுக்கு உரிய உரிமையும் அதிகாரமும் அளித்ததன் மூலம் குடும்பங் களில் நிலையையும் உயர்த்தி உள்ளது.

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கடந்த 2 ஆண்டுகளில் ரூ.4000 கோடி மதிப்பீட்டில் 9,653 கி.மீ. சாலைகளை மேம்படுத்தும் பணிகள் நடந்துள்ளன. ஊரக பகுதிகளில் மேலும் 10,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தும் நோக்கில் திட்டம் 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. மின் வாகனங்களின் மையமாக கோவை, ஒசூர் மாறியுள்ளது. முதலீடுகள் மூலம் சமமான பரவலான வளர்ச்சி கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூ.10 லட்சம் கோடி மதிப்பிலான தொழில் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

முதலீடுகள் மூலம் சமமான பரவலான வளர்ச்சி கொண்டு வரப்பட்டுள்ளது. சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தஞ்சை, தருமபுரி, தேனி மாவட்டங்களில் புதிதாக சிப்காட் அமைக்கப்பட்டுள்ளது. 2024ல் சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.4113 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்குள் வறுமையை முழுமையாக ஒழிக்க தாயுமானவர் திட்டம் தொடங்கப்பட்டு இருப்பதாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டு இருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஒன்றிய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காங்கிரஸ்



தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியாவில் பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆட்சி செய்கிற மாநிலங்களில் ஆளுநர்களின் செயல்பாடுகள் அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக அமைந்து வருகின்றன. தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டது முதற் கொண்டு, தமிழ்நாட்டின் மக்களுக்கு எதிராகவும், அரசமைப்புச் சட்டம் ஆளுநருக்கு வழங்கிய அதிகாரங்களை மீறுகிற வகையிலும் தொடர்ந்து செயல்படுவதை ஆளுநர் ஆர்.என். ரவி வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

இதன்மூலம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் செயல்பாடுகளை முடக்குகிற வகையில் அவர் செயல்பட்டு வருவது மிகுந்த கண்டனத்திற்குரியது. அத்தகைய நடவடிக்கைகளை உறுதிபடுத்துகிற வகையில், தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, இன்றைய சட்டப்பேரவை கூட்டத்தில் உரை நிகழ்த்தாமல் புறக்கணித்து விட்டு வெளியேறியிருக்கிறார்.

இதற்கு அவர் கூறுகிற காரணம், முதலில் தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென்றும், இறுதியில் தான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட வேண்டுமென்றும் கூறியிருக்கிறார். ஆனால், நீண்டகால தமிழக சட்டப்பேரவை மரபின்படி, ஆளுநர் உரைக்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதும், நிகழ்வின் இறுதியில் தேசியகீதம் பாடுவதும் நடைமுறையாக இருந்து வருகிறது.

இந்த நடைமுறை மரபுகளை மீறுகிற வகையில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் நடவடிக்கை அமைந்திருப்பது தமிழக சட்டப்பேரவையை அவமதிக்கிற செயலாக மட்டுமல்ல, அரசமைப்புச் சட்டத்தையும் அவர் அவமதித்திருக்கிறார் என்றே கருதப்படும். இதை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய கம்யூனிஸ்ட்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டப் பேரவையின் நடப்பு ஆண்டின் முதல் கூட்டம் நேற்று (06.01.2025) தொடங்கியுள்ளது. கூட்டத்தை தொடங்கி வைத்து கவர்னர் அரசின் கொள்கை திசைவழியை எடுத்துக்கூறும் உரையை வாசிப்பது வழக்கமான நடைமுறையாகும். இந்த மரபு வழியிலான நடைமுறையினை தமிழ்நாடு கவர்னர் மூன்றாவது முறையாக நிராகரித்து பொறுப்புகளை நிறைவேற்ற தவறியுள்ள கவர்னர், தமிழ்நாட்டில் நிலவி வரும் அமைதி நிலையை சீர்குலைத்து, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

தமிழ்நாடு அரசின் பொது நிகழ்வுகளின் ஆரம்பத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிகழ்வின் நிறைவில் தேசிய கீதம் பாடுவது பல பத்தாண்டுகளாக மரபாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. இதனை நன்கறிந்த கவர்னர், தமிழ்நாடு அரசு தேசிய கீதத்தையும், அரசியலமைப்பு சட்டத்தையும் அவமதித்து வருவதாக கூறுவது அப்பட்டமான அவதூறு பரப்பும் நோக்கம் கொண்டதாகும்.

நாட்டின் உச்ச நீதிமன்றம் கவர்னரின் கடமைப் பொறுப்புகளை சுட்டிக்காட்டி, அறிவுறுத்திய உத்தரவுகளையும் அலட்சியப்படுத்தி வருகிறார். சட்டப் பேரவையில் கவர்னர் உரை நிகழ்வுகள் முடிவடையும் வரை இருந்து, தேசிய கீதத்தை மதிக்க தவறிய கவர்னர் ஆர்.என்.ரவியின் மரபுகளையும், அமைதி நிலையினையும் சீர்குலைக்கும் திய உள்ள நோக்கம் கொண்ட தொடர் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 25 லட்சம் ஆவணங்கள் பதிவு:

# பத்திரப்பதிவு மூலம் ரூ.15 ஆயிரம் கோடி வருவாய்!

## கடந்த ஆண்டைவிட ரூ.2 ஆயிரம் கோடி அதிகம்!

சென்னை, ஜன.7-

தமிழ்நாட்டில் 25 லட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பத்திரப்பதிவு மூலம் தமிழ் நாடு அரசுக்கு ரூ.15 ஆயிரம் கோடி வருவாய் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.2 ஆயிரம் கோடி அதிகம் ஆகும். T கட்டணம் தமிழகத்தில் வணிகவரி (ஜி. எஸ். டி.), மது விலக்கு ஆயத்தீர்வை (டாஸ்மாக்) துறைகளுக்கு அடுத்தப்படியாக அதிக வருமானம் ஈட்டி தரும் துறையாக பத்திரப் பதிவு துறை இருக்கிறது. பொதுமக்கள் தாங்கள் வாங்கும் வீடு, நிலம், வணிக வளாகம், தொழிற்சாலை உள்ளிட்ட எந்த சொத்தாக இருந்தாலும், பத்திரப்பதிவு துறை யில் பதிவு செய்ய வேண்டும். அதற்கு கட்டணமாக சொத்தின் மதிப்புக்கு ஏற்ப மொத்தம் 9 சதவீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும், பத்திரப்பதிவுகள் அதிகரித்து வரு வதால் வருமானமும் கூடி கொண்டே செல்கிறது. அதன் படி 202425ம் நிதியாண்டில் ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 25 லட்சத்து 3 ஆயிரத்து 365 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டு ரூ.15 ஆயி ரத்து 582 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதேகாலகட்டத்தில் கடந்த 2023ம் ஆண்டு 24 லட்சத்து 93 ஆயிரத்து 80 ஆவணங்கள்

பதிவு செய்யப்பட்டு ரூ.13 ஆயி ரத்து 610 கோடி வருமானம் ஈட்டப்பட்டு உள்ளது. அதன் படி, இந்தாண்டு 10 ஆயிரத்து 285 ஆவணங்கள் அதிகம். அதே போல் வருமானமும் ரூ.1,972 கோடி அதிகரித்துள்ளது. ரூ.18 ஆயிரம் கோடி... கடந்த 2023ம் ஆண்டு நிதி யாண்டில் அதாவது ஏப்ரல் மாதம் முதல் மார்ச் மாதம் முடிய பத்திரப்பதிவுத்துறை ரூ.17 ஆயிரத்து 296 கோடி வரு மானம் ஈட்டி இதுவரை இல் லாத அளவிற்கு சாதனை படைத்து இருந்தது. இந்த சாதனை இந்தாண்டு மீண்டும் முறியடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால் இதுவரை ரூ.15 ஆயிரத்து 582 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. இன்னும் கூடுதலாக ரூ.1,715 கோடி தான் தேவை. இன்னும் மார்ச் மாதம் 31ந் தேதி வரை உள்ளதால் வரும் தை, மாசி மாதங்களில் அதிகளவு பத்திரப்பதிவு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்தாண்டு ரூ.18 ஆயிரம் கோடியை தாண்டி விடும் என்றும் அதிகாரி ஒருவர் கூறினார்.




போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நேற்று (06.01.2025), மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில், பாரத ஸ்டேட் வங்கி (SBI) மூலம் சிங்கார சென்னை பயண அட்டையை பொது மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் ஆர்.மோகன், பாரத ஸ்டேட் வங்கி உயர் அலுவலர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

28 மாவட்டங்களிலும்

# காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு அதிகாரிகள் நியமித்து ஆணை!

சென்னை, ஜன. 7-

28 மாவட்டங்களில் காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு அதிகாரிகளை நியமித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் உள்ள 9624 கிராம ஊராட்சிகள், 314 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்ட பஞ்சாயத்துகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது. 28 மாவட்டங்களிலும் வார்டு வரையறை பணிகள் முடிவடைந்த பின்னர் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதையடுத்து காலியாக உள்ள இந்த உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிக்க சிறப்பு அதிகாரிகளை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தி புதிய மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்கும் வரை சிறப்பு அதிகாரிகள் நிர்வாகத்தின் கீழ் இந்த உள்ளாட்சி அமைப்புகள் செயல்படும்




திருவண்ணாமலையில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டத்தை, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், மாநில மருத்துவர் அணித் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு, துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், செயலாளர் எழிலன் நாகநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், மலையரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மு.அம்பேத்குமார், ஒ.ஜோதி, நல்லதம்பி, வில்வநாதன், ராஜேந்திரன், அய்யப்பன், மணிக்கண்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் பிரவீன் ஸ்ரீதரன், மகேந்திரன் மற்றும் சமூகநீதி காவலர்கள், மருத்துவத்துறையில் பணியுரியும் ஊழியர்கள் மற்றும் பலர் உள்ளனர்.